# THE PEARL OF GREAT PRICE.

[A Tract of 8 pages, is a modification of a Tract published under the same title by the Palamcotta Society, and shows the worth of the soul, and the importance of securing its salvation, concluding with a prayer.]

# ஆணிமுத்து.

நல்ல முத்துக்களைத் தேடின வியாபாரி ஒருவன் ஒரு ஆணி முத்தைக் கண்டு போய்த் தனக்குண்டான யாவையும் விற்று அதைக்கொண்டானென்றும் பரலோகஇராச்சியம் அப்படிப்பட்ட முத்துக்கொப்பாயிருக்கிறதென்றும் உலக இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துநாதர் தமது சீஷர்களுடனே திருவுளம்பற்றினார். அதின்படி சில புத்திகளைச் சொல்லுகிறேன். கேளுங்கள்,

நீங்களெல்லாரும் சரீர போஷணைத்திற்கும் பூஷணைத்திற்கும் வேண்டிய முத்துக்களையாவது இரத்தினங்களையாவது சம்பாதித்துக் கொள்ளும்படிக்கு இரவும் பகலும் பிரயாசத்துடனே தூரமான தேசங்களுக்குப் பயணம் பண்ணிச் சமுத்திரத்துக்குள்ளேயுந் தாழ்ந்து முத்துக்களைக் குளித்து இப்படிப் பல விதமாய்ப் பிரயாசப்படுகிறீர்கள். இவ்வளவு பிரயாசத்தோடே முத்துப்பவளம் முதலான இ

2d. Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA, [5,000.
1843.

ரத்தினங்களைச் சம்பாதித்துக்கொண்டாலும்
அவைகள் அழிந்து போகிற மண்ணே அல்லா
மல் நித்தியமான பொருள் அல்லவே. இப்படி
ப்பட்ட பொருள் பல விதமாய் உங்களை விட்
டுப்போம். அல்லது நீங்கள் மரணமடையும்
பொழுது அதை விட்டுப் போவீர்கள். ஆகை
யால் அழிவற்ற ஆத்தும பூஷிணமும் போஷி
ணமுமாக இயேசுக்கிறிஸ்துநாதர் சொன்ன
புத்தியை அதிக விருப்பத்தோடே கேட்பீர்க
ளாக.

பரலோக இராச்சியம் ஒரு ஆணிமுத்துக்
கொப்பாயிருக்கிறதென்று அவர் சொன்னதும
ல்லாமல் அதை ஒருவன் கண்டு தனக்குண்டான
யாவையும் விற்று அதையே கொண்டது போ
ல நாமும் அந்தக் கிறிஸ்துவின் இராச்சியத்தை
க்கண்டதீர்த்தவுடனே சகலபூலோகத்துக்காரிய
ங்களையும் அதற்காக விட்டு அதையே சம்பாதி
க்கவேண்டுமென்பதாகச் சொல்லியிருக்கிறார்.
பரலோக இராச்சியமென்றாலுங் கிறிஸ்துவின்
இராச்சிய மென்றாலும் ஒன்றுதான். பாவத்தி
னாலே நாம் அதற்குப் புறம்பானவர்களாய்த்
தள்ளப்பட்டு நரகத்திலே உண்டான வேதனைக
ளுக்கும் ஏதுவானவர்களாய் இருக்கிறோம். ப
ராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்துவோவெ
னில் நம்மைப் பாவத்தினின்றும் நரகத்தினின்
றும் இரட்சிக்கும்படிக்கு இந்த உலகத்திலே
மனித அவதாரம்பண்ணிப் பரிசுத்தமான உ
பதேசஞ்செய்து நமது பாவங்களுக்காகப் பா
டுபட்டுத் தமது திரு இரத்தத்தைச் சிந்தி